2015 செப்டம்பர் 14]

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வேலூர் மாவட்டம், சத்துவாச்சேரியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, வருடந்தோறும் ரூபாய் 7 இலட்சத்து 89 ஆயிரம் செலவில் சிறந்த பயிற்சியாளர்களைக்கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மாவட்டத் தலைநகரங்களில் அமைந்த பின்பு, பெரிய நகரங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் உடற்பயிற்சிக் கூடங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 251, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

251—

பழங்குடியினர் பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*36235—**திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, சித்தேரி மலையிலுள்ள கலசப்பாடி பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, சித்தேரி

மலையில் இயங்கி வரும் கலசப்பாடி அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்த, அப்பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் இட வசதி, பழங்குடியின மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப, தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சித்தேரி மலைக் கிராமம், சுமார் 424 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 64 கிராமங்களை உள்ளடக்கிய ஒரே ஊராட்சியாகும். நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முன் வைத்திருக்கக்கூடியது என்னவென்றால், கலசப்பாடி உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியைத் தரமுயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக ஆக்குகின்றபட்சத்தில் கலசப்பாடி, கருக்கனஹள்ளி, ஆலமரத்துவளவு, அரசநத்தம், கோட்டக்காடு, நொச்சிகுட்டை, மேல்வளவு, தொங்கலுத்து, ஏறக்குறைய 8 கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் அங்கு உயர்நிலைக் கல்வியைப் பெறமுடியும். இப்போது உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 11 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கக்கூடிய வாச்சாத்தி கிராமத்திற்குச் செல்ல வேண்டும் அல்லது 14 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கக்கூடிய சித்தேரி மலைக் கிராமத்திற்குச் செல்ல வேண்டும். ஆகவேதான், அந்தப் பகுதியிலுள்ள நடுநிலைப் பள்ளியைத் தரமுயர்த்தி உயர்நிலைப் பள்ளியாகக் கொண்டுவருகிறபட்சத்தில், அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி படிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

சமீபத்தில்கூட, ஆந்திர வனத் துறையினரின் துப்பாக்கிச் சூட்டினால் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கிராமங்கள்தான் அரசநத்தம், கலசப்பாடி கிராமங்கள். போக்குவரத்து வசதியின்மையால் இன்றைக்கும் உயர் கல்வி

படிக்காததனால், வேறு வேலைவாய்ப்புக்குச் செல்ல முடியாததனால், இங்குள்ள மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். அத்தகைய பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, பழங்குடியின மாணவர்களின் கல்வியை உத்தரவாதப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியைத் தரமுயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக அறிவிப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, சித்தேரி மலையில் இயங்கிவரும் கலசப்பாடி அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியானது, 12-11-1981 ஆம் ஆண்டு ஆரம்பப் பள்ளியாகத் தொடங்கப்பட்டு, 20-8-2009 ஆம் ஆண்டு நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது. தற்போது இந்த நடுநிலைப் பள்ளியில் 68 மாணவர்கள், 74 மாணவிகள் என, ஆகமொத்தம் 142 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். 2 இடைநிலை ஆசிரியர்கள், 2 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமையாசிரியர் பணிபுரிந்து வருகின்றனர். இங்கு தற்போது எட்டாம் வகுப்பில் 8 மாணவர்கள், 13 மாணவிகள் என, ஆக மொத்தம் 21 மாணவ, மாணவிகள் மட்டுமே கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். எனவே, வரும் ஆண்டுகளில் மாணாக்கருடைய எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், இடவசதி, நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின்மீது வைக்கப்பட்ட புள்ளிவிவர அறிக்கையில், தமிழகத்திலே கல்வி அறிவில் மிகவும் பின்தங்கிய மாவட்டமான

தருமபுரி மாவட்டம், 64.8 சதவிகிதம் கல்வி அறிவு பெற்றிருக்கிறது என்று பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தினுடைய கல்வி அறிவை மேலும் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, எனது தருமபுரி மாவட்டத்திலே பழங்குடியின மக்கள் 52.2 சதவிகிதம் பேர் கல்வி அறிவு பெற்றவர்களாகவும், அதில் பெண்கள் 40.2 சதவிகிதம் பேர் கல்வி அறிவு பெற்றவர்களாகவும் உள்ளனர். உயர் கல்வி படிப்பதற்கு போக்குவரத்து வசதி இல்லாமல் இருப்பதாலும் அல்லது பள்ளி தரமுயர்த்தப்படாததனாலும், இன்றைக்கும் நான் இருக்கக்கூடிய தருமபுரி மாவட்டம் மட்டுமல்ல; தமிழகத்திலிருக்கக்கூடிய பல்வேறுபட்ட மலைப்பகுதிகளில், சித்தேரி மலை, கல்வராயன் மலை அருநூத்துமலை, கொல்லி மலை, வெள்ளி மலை, திருமூர்த்தி மலை போன்ற பல்வேறுபட்ட மலைப்பகுதிகளில் உள்ளவர்கள் உயர் கல்வி படிக்காததனால், இன்றைக்கு தமிழகத்தில் கல்வி அறிவு பெற்றவர்களில், பழங்குடியின பெண்களில் 48 சதவிகிதம் மட்டுமே கல்வியறிவு பெற்றிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவேதான், இந்த நிலைமையை மாற்றுவதற்கு, விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய பழங்குடியின மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மாற்றுவதற்கு, எனது அரூர் தொகுதியிலிருக்கக்கூடிய கலசப்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துகின்றபட்சத்தில், பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதாவது சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக, கலாச்சார ரீதியாகப் பல மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக, அத்தகைய உயர் நிலைக் கல்வியைக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல், சித்தேரிக்கு அருகில் இருக்கக்கூடிய மாம்பாறை கிராமத்திலே ஒரு துவக்கப் பள்ளி மூடப்பட்டிருக்கிறது. அதை உண்டி உறைவிடப் பள்ளியாக மீண்டும் அறிவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாடியைச் சுற்றியுள்ள 4 குக்கிராமங்களில் சுமார் 1,046 மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் பழங்குடியினர் ஆவர். மாமன்ற உறுப்பினர்

2015 செப்டம்பர் 14]

தொடர்ந்து வலியுறுத்துவதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழ்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதி, சித்தேரி மலையிலுள்ள கலசப்பாடி அரசு உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்கு நிதி வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமீபத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான அந்த 20 நபர்களுக்கும் நிதி வழங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதுக்கோட்டை காதுகேளாதோர் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிவழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஸ்டாலின், உங்களைப் பிறகு கூப்பிடுகிறேன், உட்காருங்கள். தமிழகத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, சரித்திரம் காணாத வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நிர்ணயித்த இலக்கைவிட இரண்டரை மடங்கு முதலீடுகளை ஈர்த்து, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நிகரில்லா வெற்றி பெற்று, மாபெரும் புரட்சி